செ.வெ.எண்: 42 நாள்: 27.01.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூா் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் குறித்து வருவாய்த்துறை மற்றும் வேளாண்மை துறை அலுவலா்களால் ஆய்வு செய்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் 28.01.2017 அன்று **அரியலூா், செந்துறை மற்றும் திருமானூா்** ஆகிய ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள **கிராம நிர்வாக அலுவலகத்திலும், வட்டாட்சியா் அலுவலகத்திலும், கோட்டாட்சியா் அலுவலகத்திலும் மற்றும் வேளாண்மைத்துறை உதவி இயக்குநா் அலுவலகத்திலும்** வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பெயா் மற்றும் பயிர்களின் பரப்பளவு குறித்த தகவல்கள் வைக்கப்படும்.

மேலும், 30.01.2017 அன்று **ஜெயங்கொண்டம், ஆண்டிமடம் மற்றும் தா.பழூா்** ஆகிய ஒன்றியங்களிலுள்ள **கிராம நிர்வாக அலுவலகத்திலும், வட்டாட்சியா் அலுவலகத்திலும், கோட்டாட்சியா் அலுவலகத்திலும் மற்றும் வேளாண்மைத்துறை உதவி இயக்குநா் அலுவலகத்திலும்** வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் பெயா் மற்றும் பயிர்களின் பரப்பளவு குறித்த தகவல்கள் விவசாயிகள் அறிந்துகொள்வதற்கு ஏதுவாக தகவல்கள் வைக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவா் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவா்கள் தெரிவித்துள்ளாா்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடா்பு அலுவலா், அரியலூா்.